பிரதம செயலாளர் செயலகம்,வடக்கு மாகாண சபை
ප්‍රධාන ලේකම් කාර්යාලය, උතුරු පළාත් සභාව
Chief Secretary's Secretariat, Northern Provincial Council

187,ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
187,ආඩියපාදම් පාර, තිරුනෙල්වෙලි, යාපනය.
187,Adiyapatham Road, Thirunelvely, Jaffna.

Telephone : 021 222 0843 (Dir)
: 021 222 0840 (Gen)
Fax : 021 222 0841
Website : www.np.gov.lk
e-mail : chiefsecnpc@gmail.com

My No: NP/09/FRM/CIR/2014 30.05.2014

மாகாண நிதிச்சுற்றுநிருப இல:- PF/07/2014

மாகாண செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
வடக்கு மாகாணம்.

**“தயட்ட கிருள”(Deyata Kirula) தேசிய அபிவிருத்திக் கண்காட்சியில் பங்குபற்றிய அலுவலர்களிற்கான படிகளின் கொடுப்பனவு**

மேற்படி விடயம் தொடர்பாக 11/2014ம் இலக்கமும், 2014.04.30ம் திகதியும் கொண்ட பொது நிர்வாகச் சுற்றுநிருபத்தின் பிரகாரம், “தயட்ட கிருள” தேசிய அபிவிருத்திக் கண்காட்சிக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்ட மேலதிகநேரக் கொடுப்பனவிற்கு உரித்துடையவரல்லாத அலுவலர்கள் இணைந்த படிக்குச் சமனான மேலதிக விசேட கொடுப்பனவொன்றினை பின்வரும் அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கு உரித்துடையவராவார்.

1. அரச செலவில் இருப்பிடம், உணவு மற்றும் சிற்றுண்டிகள் **வழங்கப்பட்டதன் காரணமாக இணைந்த படியினைப் பெறாத** அலுவலர்கள் இவ் விசேடபடியைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

2. அரச செலவில் இருப்பிடம், உணவு மற்றும் சிற்றுண்டிகள் **வழங்கப்படாததன் காரணமாக இணைந்த படியினைப் பெற்றுக்கொண்ட** அலுவலர்கள் இவ் விசேடபடியைப் பெற்றுக்கொள்ள முடியும்.

3. மேலதிகநேரக் கொடுப்பனவிற்கு உரித்துடைய அலுவலர்கள் இவ் விசேடபடியைப் பெற்றுக் கொள்ளமுடியாது. இருப்பினும் தாபனவிதிக்கோவைக்கமைவாக மேலதிகநேரக் கொடுப்பனவினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

4. 2014.02.21ம் திகதியிலிருந்து 2014.03.01ம் திகதி வரையான காலப்பகுதிக்குள் அலுவலர்கள் தமது அலுவலக நேரத்தைவிட மேலதிகமாகக் கண்காட்சிக் கடமைகளை நிறைவேற்றிய நாட்களின் எண்ணிக்கைக்கு இந்த விசேட படியைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

ர.விஜயலட்சுமி
பிரதம செயலாளர்

பிரதிகள்:-

1. கௌரவ ஆளுநரின் செயலாளர் - வ.மா – கௌரவ ஆளுநர் அவர்களிற்கு அறியத் தருவதற்காக
2. உதவிக் கணக்காய்வாளர் நாயகம் - வ.மா } தகவலுக்காக
3. மாகாண பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் } தகவலுக்காக